

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 18.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரத்தில் பல்நோக்கு விளையாட்டரங்கம் அமைத்தல் மற்றும் புதுக்கோட்டை பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் புதுப்பித்தல் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.இரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா, உயர் அதிகாரிகள் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தா.கார்த்திகேயன், பி.மதுசூதன் ரெட்டி, ஜெ.மேகநாத ரெட்டி உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.10.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.10.2025) தலைமைச் செயலகத்தில், அமர் சேவா சங்கத்தின் நிறுவனர் எஸ்.ராமகிருஷ்ணன் மற்றும் கவுரவ செயலாளர் எஸ்.சங்கர ராமன் ஆகியோர் சந்தித்து பேசினார்கள். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அமர் சேவா சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் அன்பு ரமேஷ் மற்றும் நிர்வாகிகள், அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பதாரர்களில்

# தகுதியான மகளிருக்கு டிச.15 முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!

## பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 18 -**

**“முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியான மகளிருக்கு டிச.15 முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்ப்படும்” என்று சட்டப் பேரவையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தொடர்பான விவாதத்தின் போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

ஒட்டுமொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை’ பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15, 2023 அன்று தொடங்கி வைத்தார்கள். மகளிரின் பொருளாதார விடுதலைக்குத் துணை நிற்கின்ற இந்தத் திட்டத்தின்மூலம் ஒவ்வொரு மாதமும் சுமார் ஒரு கோடியே 14 இலட்சம் மகளிருக்கு இந்த உரிமைத் தொகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள்வழங்கிவருகின்றார்கள்.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த 26 மாதங்களாக, 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கி, இந்த ஆண்டு வரை இன்றைக்கு 16ஆம் தேதி; ஏற்கெனவே ஆயிரம் ரூபாய் கொடுத்தாகிவிட்டது. தமிழ்நாட்டு மகளிருக்கு, இதுவரை கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 இலட்சம் மகளிர் ஒவ்வொருவருக்கும் சுமார் 26 ஆயிரம் ரூபாயை நம்முடைய அரசு கொடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோடி ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையில் பதிவு செய்ய



விரும்புகின்றேன்.

**சில விதிகள் தளர்வு!**

இத்திட்டத்தில், கூடுதலான மகளிர் பயனடைய வேண்டுமென்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் சில விதிகளை தளர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக, அரசு மானியத்தில், 4 சக்கர வாகனம் வைத்திருக்கும் குடும்பங்கள், OAP பெறும் குடும்பங்கள் ஆகியவற்றில், விதிகளைப் பூர்த்தி செய்யும் மகளிருக்கும் உரிமைத் தொகை சேர்த்து வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அவையில் அறிவித்தார்கள்.

இந்தச் சூழலில், நம்முடைய அரசு, அரசு சேவைகள் மக்களைத் தேடி சென்றடைய வேண்டுமென்ற நோக்கில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தை 19.06.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த முகாம்களில், கிராமப்புறங்களில் 15 துறைகளின் வாயிலாக 45 சேவைகளும், நகர்ப்புறங்களில் 13 துறைகளின் வாயிலாக 43 சேவைகளும் அரசால் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த முகாம்கள் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழும் மனுக்கள் ஏற்கப்படும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்காக, நவம்பர் 15ஆம் தேதி வரை 10 ஆயிரம் முகாம்கள் நடத்தப்படும் என்று அரசால் அறிவிக்கப்பட்டது.

நேற்றையதினம், 15.10.2025 வரை 9 ஆயிரத்து 55 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்கள் மத்தியில், இந்த முகாம்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு இருக்கிறது. இதுவரை, உரிமைத் தொகை வேண்டி 28 இலட்சம் மகளிர் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களில் விண்ணப்பங்களை அளித்துள்ளனர்.

“உங்களுடன் ஸ்டாலின்” முகாம்கள் நவம்பர் 14, 2025 அன்று முடிவடைய உள்ளன. இதற்கிடையே, புதிதாக உரிமைத் தொகை கோரி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் வருவாய்த் துறைமூலம் Field Inspection செய்யப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் நவம்பர் 30, 2025க்குள் முடிவடையும் என்று கூறிக் கொள்கிறேன்.

முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியான மகளிருக்கு வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த செய்தியை இந்த மாமன்றத்தின் வாயிலாக உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மகளிரின் பொருளாதார தன்னிறைவுக்கு என்றும் நம்முடைய திராவிட மாடல் அரசு துணை நிற்கும் என்று கூறிக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன். நன்றி.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.



சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட 10 ஊராட்சிகள்,1 பேரூராட்சிகளில் உள்ள 10,000 கழக நிர்வாகிகளுக்கு வீரபாண்டி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் சதிஷ்குமார் ஏற்பாட்டில் விழாக்கால பரிசுகளை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் க.சுரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் மலர்விழி ராஜா, சந்திரமோகன், ஒன்றிய அவை தலைவர் முருகன், ஒன்றிய துணை செயலாளர் மணிமாறன், அங்குசாமி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், சிவன்மலை வள்ளியம்மாள் திருமண மண்டபத்தில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.மனிஷ் நாரணவரே உள்பட பலர் உள்ளனர்.